Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 255 | திங்கட்கிழமை 08 ஒகஸ்ட் 2022 | ஆடி 23 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50




## வெறிச்சோடிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

'கியூ.ஆர்' முறைமை வெற்றி

யாழ்ப்பாணம், ஒக. 8
வடக்கில் நேற்றும், நேற்று முன்தினமும் பல எரி பொருள் நிரப்பு நிலை யங்கள் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன.
'கியூ ஆர்' குறியீட்டு முறையில் கடந்த திங்கட் கிழமை

11 ➤

கிளிநொச்சியில்

## இ.போ.ச. சேவையினர் இன்று பணிப்புறக்கணிப்பு

கிளிநொச்சி, ஒக. 8
இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் கிளிநொச்சி சாலையினர் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ள தாக அறிவித்துள்ளனர். கிளிநொச்சி - தர்மபுரம் பகுதி

11 ➤

# இலங்கைக்கான கடன்: சீனா, ஜப்பான் நிறுத்தம்

## திட்டங்கள் அரைகுறையில் கைவிடப்படும் பேராபத்து

கொழும்பு, ஒகஸ்ட் 8
இலங்கை அரசாங்கம் கடன்களை மீளச் செலுத்த முடியாது என்று அறிவித்தமையால் சீனா மற்றும் ஜப்பான் நிதி உதவியில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

11 ➤

## சமையல் எரிவாயு; சரிகிறது விலை



கொழும்பு, ஒக. 8
சமையல்எரிவாயுகொள் கலன்களின் விலை இன்று குறைக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சுமார் 200 ரூபா அளவில் விலை குறைப்பு மேற் கொள்ளப்பட

11 ➤

## இன்றுமுதல் மீண்டும் மின் தடை

கொழும்பு, ஒக. 8
நாட்டில் இன்று முதல் நாளைமறுதினம் புதன் கிழமை வரை இரவில் 1 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ள தாக அந்த ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

11 ➤

அரச நிறுவனங்களை

## தனியார் மயப்படுத்தல்; எதிர்க்கட்சி ஆதரிக்கும்

கொழும்பு, ஒக. 8
சர்வதேச நாணய நிதி யம் கடன் வழங்குவதற் கான நிபந்தனையாக 40 அரச நிறுவனங் களைத் தனியார் மய மாக்கும்படி கோருகிறது. அவ்வாறு தனியார் மயப் படுத்தும் திட்டம் நாடாளு மன்றத்தில்

10 ➤

## ரணில் விரித்துள்ள வலையில் தமிழ்க் கட்சிகள் சிக்கக்கூடாது

எச்சரிக்கிறார் பொன்சேகா



கொழும்பு, ஒக. 8
'மொட்டுக்' கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரித்துள்ள வலையில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிக்கக்கூடாது. தமிழ், முஸ் லிம் மக்கள் வழங்கிய ஆணைக்கு அவர்கள் துரோகம் செய்யக்கூடாது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்

10 ➤

## கூட்டமைப்பை பலப்படுத்த புளொட் முயற்சி எடுக்கும்

அந்தக் கட்சியின் மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக. 8
தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை பலப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்க ளின் நலன் சார்ந்து இயங்கிவரும் இதர தமிழ்க் கட்சிகளை ஒன் றிணைக்கும் முயற்சி யில் புளொட் ஈடுபடும் என்று அந்தக்

11 ➤

முறைகேடு செய்த அதிகாரிகளே!

## நீங்களாகவே வெளியேறுங்கள் இல்லையேல் அம்பலமாக்குவேன்!

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கடைசி மிரட்டல் அஸ்திரம்



யாழ்ப்பாணம், ஒக. 8
கடந்த காலங்களில் வடக்கு மாகாண நிர் வாகம் ஒரு சில அதிகாரிகளை திருப்திப் படுத்தும் முகமாகவே செயற்பட்டுள்ளது. தவறிழைத்த அதிகாரிகள் தாங்களாகவே உணர்ந்து வெளியேறவேண்டும். இல்லையேல் அவர்களது முறை கேடுகள் மக்கள் முன் அம் பலப்படுத்தப்படும் - இவ்வாறு வடக்கு மாகாண

11 ➤

## தமிழர் பகுதியில் டொலரை தேடும் ரவி கருணாநாயக்க!

விரிவு - பக். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித உரிமைகள் தொடர்பில் ஆராய

# இலங்கைக்கு வருகிறது ஐ.நா.வின் சிறப்புக் குழு

கொழும்பு, ஓக. 8

**இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து நேரில் கண்டறிவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.**

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிரிவுக்கான தலைவர் ரொனிமுங்கொவன் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கான பயணத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

தமது பயணத்தின் ஒருபகுதியாக நீதி அமைச்சரையும், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் அவர்கள் சந்திக்கவுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் குழுவினரின் அறிக்கையை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 51ஆவது அமர்வில் புதிய மனித உரிமை ஆணையாளர் அல்லது இடைக்கால ஆணையாளர் சமர்ப்பிப்பார்.

இந்த அறிக்கையை தயாரிப்பதில் முக்கியமான நபராக ரொனிமுங்கொவன் காணப்படுவார் எனத் தெரிவித்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள் அவர் முக்கியமான விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சை மேற்கொள்வார் என்றும் தெரிவித்துள்ளன. இந்த வருடம் மே மாதம் வரை இலங்கை தொடர்பான முன்னைய தீர்மானத்துக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்குவது குறித்து ஐ.நா. ஆராய்ந்து வந்தது.

எனினும் காலிமுகத்திடலில் அலரி மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல், அமைதியான ஆர்ப்பாட்டங்கள் ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டமை போன்றவை இலங்கை மீது ஐ.நா. தனது பிடியை இறுக்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளன என்று இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ம)

## இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 8

இலங்கை அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'ஜனநாயகத்துக்கான இலங்கையர்கள்' என்ற குழுவினரே, அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நாடு இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணமானவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்தவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம)

## போராட்டக்காரரோடு அரசாங்கம் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

*முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 8

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கவனத்தில் கொள்ளுமாறும் அரசியல் சீர்திருத்தங்களுக்காக முன்வந்திருக்கும் போராட்டக் குழுவினருடன் பேச்சை மேற்கொண்டு தாமதம் இன்றி நல்லதொரு இணக்கப்பாட்டுக்கு வருமாறும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கும் மின்சாரம் மற்றும் எரிபொருளை விநியோகிப்பதற்கும் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதும் தற்போது மிக அவசியமான விடயமாகும்.

அத்துடன், நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை மேம்படுத்துவதின் ஊடாக பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசில் நேரடியாகப் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் 19ஆவது திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

தொழிற்சங்கத் தலைவர்களை கைதுசெய்தல் ஜனாதிபதியின் சிம்மாசன உரைக்கு முரணானது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர், இலங்கை வங்கி தொழிலாளர் சங்கத்தின் அதிகாரிகள் ஆகியோரைக் கைதுசெய்தமையை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்பதை வலியுறுத்தும் அதேவேளை எமது கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாட்டின் எதிர்கால நலனுக்காக அனைத்துக் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்களுடன் பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன் அவசியம் கருதி நாம் இதை வலியுறுத்துகிறோம். அரசும் இந்தச் சந்தர்ப்பத்தை தவறிவிட்டால் ஜனாதிபதி தெரிவித்த சர்வகட்சி அரசை உருவாக்குவதற்கும் சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கும் அது தடையாக அமைந்துவிடும் -என்றார். (ம)

## அரசியல் உறுதித்தன்மையை விரைந்து நிரூபிக்கவேண்டும்

*சர்வதேச ஒத்துழைப்பைப் பெற அதுவே வழி என்கிறார் மைத்திரி*

கொழும்பு, ஓக. 8

சர்வதேச நிறுவனங்கள், அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அரசியல் உறுதித்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கவேண்டும். அதற்கு வெகுவிரைவில் சர்வகட்சி. அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென்று தெரிவித்தார் சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசு தொடர்பில் எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பில் ஏனைய அனைத்துக் கட்சிகளுடனான கலந்துரையாடல்கள் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அவதானம் செலுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆயினும் நாடாளுமன்றத்தில் சிலர் சர்வகட்சி அரசை விரும்பவில்லை. சர்வகட்சி அரசை அமைப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே காணப்படுகிறது.

எனினும் இதில் பல இடையூறுகள் காணப்படுகின்றன. தற்போதுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும், சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜைக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் மத்தியில் இலங்கையில் அரசியல் உறுதித்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிப்பதற்குள்ள சிறந்த வழி சர்வகட்சி அரசாங்கமேயாகும்.

எனினும் இதனையும் சிலர் எதிர்பார்ப்பார்களாயின் எவ்வாறான நிலைமை தோற்றம்பெறும் என்று சிந்திக்க வேண்டும்.

அரசாங்கம் முயற்சிக்குமாயின் ஒரு மாத காலத்துக்குள் சர்வகட்சி அரசை அமைக்க முடியும். சர்வகட்சி அரசு அமைக்கப்படுமா? இல்லையா? என்பதிலேயே அமைச்சுப்பதவிகளை ஏற்பதா? இல்லையா? என்ற விடயம் அடங்கியுள்ளது -என்றார். (ம)



## சீனக் கப்பலின் வருகை தொடர்பில் கலந்தாலோசித்த பின்னரே பதில்

*அந்த நாட்டின் தூதரகம் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 8

சீனக் கப்பலின் இலங்கைக்கான பயணத்தைப் பிற்போடவேண்டுமென்று இலங்கை அரசு கோரிக்கை விடுத்த நிலையில், இது தொடர்பில் சீன அரசுடன் கலந்தாலோசித்த பின்னரே பதில் வழங்கப்படும் என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனத் தூதுவருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. சீனத் தூதுவரின் வேண்டுகோளின் பேரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதையடுத்தே கப்பலின் வருகையைப் பிற்போடுமாறு இலங்கை கோரிய நிலையில், இது தொடர்பில் சீன அரசுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் தனது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது என்ற அடிப்படையில் இந்தியா முறைப்பாடு செய்துள்ளதைத் தொடர்ந்து சீனக் கப்பலின் இலங்கைக்கான பயணம் சர்ச்சைகள் நிறைந்ததாக மாறியுள்ளது. (ம)

## தரவு திரட்டவே வருகின்றது சீனக் கப்பல்!

### கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

இந்தியப் பெருங்கடலில் சீனக் கடற்படையின் நடவடிக்கைகளுக்குத் தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்[illegible] யுவா[illegible] இந்து சமுத்திரத்துக்குள் பிரவேசிக்கவுள்ளதாக கேணல் ஆர்.ஹரிகரன் கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தின் [illegible]ய்வு நிபுணரான அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- கடலின் பாதைகளை வரைபடமாக்குதல் போன்ற தரவுகள் இந்தக் கப்பல்கள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. இத்தகைய தரவுகள் வெளிநாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களின் நகர்வுகளை கண்காணிக்க உதவுவதுடன் சொந்தக் கப்பல்களின் பாதுகாப்பான பயணங்களுக்கும் உதவுவதாக உள்ளன -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாறாத மகாவம்சச் சிந்தனை

பட்டகாலிலேயே படும், கெட்டகுடியே கெடும் என்பார்கள். இலங்கை விடயத்திலும் அதுதான் நடந்து கொண்டிருகிறது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, மக்கள் போராட்டம், அரசியல் ஸ்திரத்தன்மையின்மை, வல்லாதிக்க அரசுகளின் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல் சார் நகர்வுகள் என்று இலங்கை நாலாபுறமும் தத்தளித்துக் கொண்டிருக்கையில், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தன் பங்குக்கும் ஒரு வெடியைக் கொளுத்திப் போட்டுள்ளார். இறுதிப்போரில், போர்க் குற்றத்தில் ஈடுபட்ட 58 இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்ய உதவுமாறு, மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளிடம் அவர் விடுத்துள்ள கோரிக்கைதான் இலங்கையை இப்போது திக்குமுக்காட வைத்துக்கொண்டிருக்கும் விடயம்.

மிச்செல் பச்லெட்டின் இந்தக் கோரிக்கை ஊடகங்களில் வெளிவந்ததும்தான் தாமதம், ஜி.எல்.பீரிஸில் இருந்து அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன வரைக்கும் ஆளாளுக்கு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு எதிராக 'கோதா'வில் இறங்கிவிட்டனர். 'இலங்கை இருக்கும் இக்கட்டான நிலையில் இப்படி ஒரு கோரிக்கையை மிச்செல் பச்லெட் வெளியிட்டமை தவறு. அவரைக் கண்டிக்க வேண்டும்' என்று அரசாங்கத்தரப்பிலிருந்து பலமான குரல் எழுந்துள்ளது. இத்தனைக்கும் மிச்செல் பச்லெட் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்குமாறு எந்தவொரு நாட்டிடமும் கோரவில்லை. மாறாக தம் உறுப்பு நாடுகளுக்கு இலங்கை இராணுவத்தின் குறித்த 58 அதிகாரிகளும் வந்தால், அவர்களைக் கைது செய்ய உதவுமாறுதான் கேட்டிருந்தார். எனவே அந்த நாடுகளுக்கு, போர்க் குற்றம் புரிந்த அதிகாரிகள் பயணிக்காதவரை இலங்கைக்கு நேரடியாக எந்தவொரு பாதிப்பும் இல்லை. அப்படியானால் எதற்காக சிங்கள இனவாதிகளும், அரச தரப்பும் இப்படி வானத்துக்கும் பூமிக்கும் எகிறிக்குதிக்கின்றனர்? காரணம் இருக்கின்றது.

ரணில் ஜனாதிபதியானால், இலங்கை தொடர்பாக சர்வதேசம் கொண்டிருக்கும் எண்ணக்கருவை மாற்றியமைத்து, சாதகமான சூழமைவை உருவாக்குவார் என்றே கருதப்பட்டது. ஆனால், ராஜபக்ச காலத்தை விடவும் இப்போது இன்னும் அதிகமாக இலங்கை பற்றிய பாதகமான எண்ணத்தையே ரணில் சர்வதேச ரீதியாக பரவலாக்கி வருகின்றார். குறிப்பாக போராட்டக்காரர்கள் மீதான அரச இயந்திரத்தின் வெறித்தனமான பாய்ச்சல், பல நாடுகளிடையே இலங்கை மீதான அண்மைக்காலப் பரிவை மீண்டும் இல்லாதாக்கி விட்டது. அதனாலேயே உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான உதவிகளை வழங்கப் பின்னடிக்கத் தொடங்கியுள்ளனர். இப்படியான நிலையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியுள்ளது மிச்செல் பச்லெட்டின் கோரிக்கை.


ஏனெனில், மிச்செல் பச்லெட்டின் கோரிக்கையை நிறைவேற்றுதலையும் சர்வதேச நாணய நிதியம் தனது நிதி வழங்குகைக்கான நிபந்தனைகளில் ஒன்றாக முன்வைக்கக் கூடும். அதைவிட இன்னமும் இலங்கை போர்க்குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நாடு என்ற மோசமான விம்பத்தை உண்டாக்குவதால், அதைக் காரணம் காட்டி உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தன் உதவிகளைக் குறைக்கவோ அல்லது முற்றாக கைகழுவி விடவோ சந்தர்ப்பங்கள் மிக அதிகம். அதைவிட மிச்செல் பச்லெட்டின் கோரிக்கையை அடிப்படையாக வைத்து, இலங்கைக்கான 'ஜி.எஸ்.பி' வரிச்சலுகையையும் இல்லாதாக்கும் சாத்தியங்களையும் புறக்கணிக்க முடியாது. இப்படியான பாரதூரமான விளைவுகளை மிச்செல் பச்லெட்டின் கோரிக்கை ஏற்படுத்திவிடும் என்பதாலேயே இவ்வளவுதூரம் இலங்கை அரசாங்கமும், இனவாதிகளும் அந்தரிக்கின்றனர்.

ஆனாலும், ஒட்டுமொத்த இலங்கையே பொருளாதார நெருக்கடிக்குள் அமிழ்ந்து அழிந்து போனாலும்கூட, போர்க்குற்றவாளிகளை சர்வதேசத்திடம் ஒப்படைக்கவோ அல்லது அவர்கள் மீது உள்ளகரீதியாகவேனும் நடவடிக்கை எடுக்கவோ இலங்கை தயாராகவில்லை. இந்தநேரத்தில் கூட – இப்படியான இக்கட்டான காலத்திலும் – போர்க்குற்றவாளிகளைக் காப்பதையே சிங்கள தேசம் தன் முதல் கடமையாக நினைக்கின்றது. இந்த மகாவம்சச் சிந்தனை மாறும் வரை எப்படி மீட்சி கிடைக்கும்?

நாளொரு நல்வார்த்தை

"நரியிடமிருந்து மதத்தைக் கற்றுக் கொண்டவனுக்கு கோழியைத் திருடுவது தொண்டாகத் தோன்றும்"

- துருக்கியப் பழமொழி




### காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான

# 2,000ஆம் போராட்ட நாளில் அனைவரும் அணிதிரள்க!

**யாழ்ப்பாணம், ஓக. 8**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நீதிகோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், எதிர்வரும் 12ஆம் திகதியுடன் 2 ஆயிரமாவது நாளை நிறைவுசெய்கின்ற நிலையில், அன்றையதினம் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராஜா கனகரஞ்சினி, அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்த நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத்தேடி 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி கிளிநொச்சி முருகன் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி 2 ஆயிரமாவது நாளை எட்டுகின்றது. இதை முன்னிட்டு கிளிநொச்சி முருகன் ஆலயத்துக்கு முன்பாக மிகப்பெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் எமக்கு நீதி மறுக்கப்பட்ட நிலையில், சர்வதேசத்திடம் நீதிகோரிய எமக்கு சர்வதேசம் உரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும். ஐ.நா. கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என ஐ.நா. பதில்கூறவேண்டும். தமிழ் மக்களின் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இடம்பெறும் இந்தப் போராட்டத்தில், பல தரப்பினரும் கலந்துகொண்டு ஆதரவை நல்கவேண்டும் - என்றார். (ம-159)

# மின்சாரசபை சீரமைப்புக்கு எட்டுப் பேர் கொண்ட குழு!

கொழும்பு, ஓக. 8

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதற்காக எட்டு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மின்சாரசபை மறுசீரமைப்புக்கான பரிந்துரைகளை ஒரு மாதத்துக்குள் முன்மொழிய வேண்டும் என்று இந்தக் குழுவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

இந்தக் குழுவில், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.எம்.சி பெர்டினாண்டோ மற்றும் இலங்கை மின்சாரசபையின் முன்னாள் ஏ.ஜி.எம். மருத்துவர் சுசந்த பெரேரா ஆகிய அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் பொருத்தமான நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை 09.08.2022 செவ்வாய்க்கிழமை ஆடி 24

சுபநேரம் : 10.34 - 12.04
ராகுகாலம்: 03.04 - 04.34

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை பிரிக்க ஜனாதிபதி ரணில் சதி!

## வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் பகிரங்கக் குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், ஓக. 8**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சதி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்.**

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவைத்தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்தனர் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் ஒன்றையொன்று இணைத்துக்கொண்டு செயற்படவேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்துச் செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியைத் தொடர்வார்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் உபகட்சியினுடைய நிகழ்வே இது. இங்கு அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே. தற்போது அது உடைந்து இருந்தாலும்கூட அடிப்படையில் தமிழரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது. தேசிய அரசாங்கம் அமைக்கப்படலாம் என்று தற்போது பேசப்பட்டு வருகின்றது. ஆனால், தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என நான் நம்பவில்லை - என்றார். (ம-26)

# இன விகிதாசாரத்தை மாற்றும் சக்திகளை புளொட் எதிர்க்கும்!

## பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஓக. 8

அபிவிருத்தி எனும் போர்வையில், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்குடன், தமிழர் தாயகத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களாகவுள்ள மகாவலி அதிகாரசபை, தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) மேற்கொள்ளும் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

புளொட் அமைப்பின் 10ஆவது பொதுச்சபைக் கூட்டத்தின் தீர்மானங்களில் ஒன்றாகவே இந்த விடயத்தை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன்,

1. இலங்கையில் தமிழ் மக்களினது நியாயமானதும் அடிப்படையானதுமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை, ஒரு தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஷ்டி அமைப்பு முறையிலான அரசமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளுதல்.
2. இறுதிப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட, மனித குலத்தால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத போர்க்குற்ற நடவடிக்கைகள் குறித்த பொறுப்புக்கூறல்கள் சம்பந்தமாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய அழுத்தங்களை இலங்கை அரசுக்கு வழங்க, தமிழ் மக்களின் நீண்டகால நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்படுதல்.
3. வடக்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்து பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்ற இந்திய மீன்பிடிப் படகுகள் விடயத்தில், என்றென்றும் எமது ஆதரவு சக்தியாகவும் மிக நெருங்கிய உறவாகவும் விளங்கும் தமிழக மக்களுடனான நீண்டகால உறவுகள் பாதிக்கப்படாத வகையில் இருதரப்புப் பேச்சு ஆக்கபூர்வமான வழிகளில் அரசுகள் மட்டத்திலும் மீனவ சமூகங்கள் மட்டத்திலும் இயன்றளவு விரைவாக செயற்படுத்தல் - உள்ளிட்ட 20 தீர்மானங்களை தனது செயற்பாட்டுத் தளமாக பொதுச்சபைக் கூட்டத்தில் வரிந்துகொண்டுள்ளது புளொட். (ம)

# சண்டிலிப்பாய் பாக்கு: மாசியப்பிட்டியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய்ப் பகுதியில் திருடப்பட்ட பாக்கு மூடை மாசியப்பிட்டியில் மீட்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் - ஆலங்குழாய் பகுதியிலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த இரண்டு மூடை பாக்குகள் திருடப்பட்டன என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட மானிப்பாய் பொலிஸார், கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, குறித்த பாக்கு மூடைகளை மாசியப்பிட்டியில் வைத்து மீட்டனர். சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைத் தேடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-14,125)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பு!

முல்லைத்தீவு, ஓக. 8

புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக இன்று முன்னெடுக்கவுள்ள போராட்டத்துக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் முழுமையான ஆதரவை வெளியிட்டுள்ளது.

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின் அலுவலகத்திலும் விடுதியிலும் முறையற்ற விதத்தில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸாரே இவ்வாறு முறையற்ற விதத்தில் நடந்துகொண்டமை கண்டனத்துக்குரியது. எனவே குறித்த பொலிஸாரின் அத்துமீறிய நடவடிக்கை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சட்டநடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரைக் கோரி நிற்கின்றோம்.

அத்துடன் குறித்த பொலிஸாரின் முறையற்ற நடவடிக்கைக்கு எதிராக வடமாகாண இலங்கை நிர்வாக சேவை சங்கத்தால் இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்படும் எதிர்ப்புப் போராட்டத்துக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தனது முழுமையான ஆதரவை தெரிவிப்பதுடன் எமது ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்பதை அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (ம-14)

## புதுக்குடியிருப்பு

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக இன்று போராட்டம்!

முல்லைத்தீவு, ஓக. 8

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக இன்று போராட்டமொன்றை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயகாந்தின் அலுவலகமும் உத்தியோகபூர்வ விடுதியும் கடந்த 30ஆம் திகதி மாலை 6.30 மணி தொடக்கம் 12 மணி வரையான காலப்பகுதியில் முறையான தேடுதல் அனுமதியின்றி சோதனை செய்யப்பட்டது. அதன்போது அலுவலகத் தேவைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் அனுமதியின்றி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத் என்பவரால் எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த நிலையிலேயே, குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளக்கோரி வடமாகாண இலங்கை நிர்வாக சேவை சங்க உத்தியோகத்தர்கள் மாகாணம் தழுவிய சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்கு இன்று அழைப்பு விடுத்துள்ளனர்.

அதற்கமைய இன்று முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளதுடன் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் ஊடக சந்திப்பு ஒன்றையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். இதில் அனைத்து இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய தொழிற்சங்கங்களிடம் இருந்தும் போராட்டத்துக்கு ஆதரவு கோரப்பட்டுள்ளது. (ம-14,19)

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் ஒருவர் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே பகுதியைச்சேர்ந்த 48 வயதான சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அத்துடன் அவரிடமிருந்து ஒரு லீற்றர் கசிப்பையும் பொலிஸார் கைப்பற்றினர். அதனையடுத்து சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரிலிருந்து வியாழனன்று நாடு திரும்புகிறார் கோத்தா?

## கொழும்பு ஊடகங்கள் தகவல்

**கொழும்பு, ஓக. 8**

**இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கலவரங்களை அடுத்து, நாட்டை விட்டு வெளியேறி சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, எதிர்வரும் வியாழக்கிழமை நாடு திரும்பவுள்ளார் என்று தகவல் வெளிவந்துள்ளது.**

கோத்தாபய ராஜபக்ச, தனது நுழைவிசைவுக் காலத்தை மேலும் 14 நாள்கள் நீடிப்பதற்கு சிங்கப்பூர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று முன்னதாகத் தகவல் வெளிவந்த நிலையில், அவர் நாடு திரும்பவுள்ளார் என்றும் எதிர்வரும் வியாழக்கிழமை நாடு திரும்புவார் என்றும் தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

தனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும், சிங்கப்பூரில் அவரது நுழைவிசைவு முடிவடைவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பாகவே கோத்தாபய இலங்கைக்குத் திரும்பவுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# ஹிருணிகாவுக்கு எதிரான கோரிக்கைகள் நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 8

ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 10 பேரை சந்தேகநபர்களாகப் பெயரிடவேண்டுமென்று பொலிஸார் விடுத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் ஹிருணிகா உள்ளிட்ட 10 பேருக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை 6ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஹிருணிகா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அந்தக் குழுவை சந்தேகநபர்களாகப் பெயரிடவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கையை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான முறையான விசாரணைகளை மேற்கொண்டு ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

# டெங்கு, கொரோனாத் தொற்றால் சிறுவர்கள் அதிகளவு பாதிப்பு

டெங்கு மற்றும் கொரோனாத் தொற்றுக் காரணமாக அதிகளவான சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் டெங்குக் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் காலி மாவட்டங்களில் அதிகளவான தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. சிறுவர்களிடம் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி ஆகிய பொதுவான நோய் அறிகுறிகளை அவதானிக்க முடிகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# அரசமைப்பை மாற்றுவதற்கு பாடுபடுவேன்!

## பிரதமர் உறுதி



கொழும்பு, ஓக. 8

தற்போதைய ஆட்சி முறையையும் அரசமைப்பையும் மாற்றுவதற்கு நிச்சயமாகப் பாடுபடுவேன் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். கொஸ்கம, பொரலுகொட ஸ்ரீ வர்தனாராமயே விகாரையின் விகாராதிபதியை நலன் விசாரிப்பதற்காக சென்றபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# துப்பாக்கியுடன் இருவர் கைது

கொழும்பு, ஓக. 8

இருவேறு பிரதேசங்களில் இருவர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்றுமுன்தினம் தெரிவித்தது. கொழும்பு, பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவரும், கொழும்பு அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலட்டுவாவ பிரதேசத்தில் உள்நாட்டு துப்பாக்கியுடன் பிறிதொருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-இ)

# பெரமுனவின் தலைமையகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன!

கொழும்பு, ஓக. 8

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்துக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் பயணம் செய்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது முன்னாள் அமைச்சர்களான பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட கட்சியின் முக்கியமான உறுப்பினர்களை அவர் சந்தித்துள்ளார். இதன்போது கருத்துத் தெரிவித்த நாமல் ராஜபக்ச, கட்சித் தலைமையகத்துக்காக நேரம் ஒதுக்கியமைக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்ததோடு, அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்கும் அரசியல் உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும் -என்றார். (ம)

# அவசரகாலச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள்!

கொழும்பு, ஓக. 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தின் சில அம்சங்கள், பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேடுதல் மற்றும் கைது தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் 365 (அ) மற்றும் 365 (ஆ) சரத்துகள் நீக்கப்பட்டு, அதே பிரிவின் 408 மற்றும் 410 முதல் 420 வரையான சரத்துகள் அவசரகாலச் சட்டங்கள் தொடர்பாக சேர்க்கப்பட்டுள்ளன. (ம)

# அரசாங்கத்துக்கு பெரமுன நிபந்தனையில்லாத ஆதரவு

## ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம். ஒரு காலத்தில் அரசியல் ரீதியில் குறிப்பிட்ட கருத்துக்கள் குறித்து தற்போது அவதானம் செலுத்தக்கூடாது என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், 'தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகிய ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவியை வழங்கும் அளவுக்கு பொதுஜன பெரமுனவுக்கு மூளைக் கோளாறு இல்லை என ஆரம்பத்தில் குறிப்பிட்டீர்கள். அந்த நிலைப்பாட்டில் இன்றும் இருக்கின்றீர்களா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்குகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியலில் ஒவ்வொரு காலத்துக்கு ஒவ்வொரு விடயம் குறிப்பிடப்படும். அன்று குறிப்பிட்ட விடயம் தொடர்பில் இன்று அவதானம் செலுத்தக்கூடாது. பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்ததை தொடர்ந்து அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சி உட்பட சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. சவால்களைப் பொறுப்பேற்க எவரும் தைரியமாக முன்வராத நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று சவால்களை வெற்றிகொள்ள சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுத்து, தற்போது அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் -என்றார். (ம)

# நான்காம் டோஸுக்காக நடமாடும் மையங்கள்!

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸை மக்களுக்கு வழங்குவதற்காக நடமாடும் தடுப்பூசி மையங்களை அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தேவைக்கு ஏற்ப வாகனங்களை இனங்கண்டு சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸை பிரதான மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளிடமிருந்து பெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேக்கரி உற்பத்திகளுக்கான

# மூலப்பொருளின் விலை குறைந்தால் விலைகளைக் குறைப்பதற்குத் தயார்

**யாழ்ப்பாணம், ஓக. 8**

**வெதுப்பக உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களின் விலைகள் குறைவடைந்தால் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியும் என யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்துள்ளார்.**



வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வெதுப்பக உற்பத்திகளின் விலையை நாங்களாக அதிகரிக்கவில்லை. மூலப்பொருள்களின் விலையு யர்வு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு போன்ற காரணங்களினாலேயே அதிகரிக்க நேரிட்டது.

தற்போதும் மூலப்பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு எரிபொருள் சீராகக் கிடைக்கப்பெறுமாயின் எமது பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு நாம் தயார். தற்போது வெதுப்பகங்கள் எரிபொருளைப் பெற யாழ்ப்பாண பிரதேச செயலாளரினால் ஒரு வெதுப்பகத்துக்கு ஓர் எரிபொருள் நிரப்பு நிலையம் என்ற திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தை ஏனைய மாவட்டங்களிலும் அல்லது நாடுமுழுவதிலும் நடைமுறைப்படுத்துமிடத்து வெதுப்பகங்களுக்குரிய எரிபொருளை இலகுவாகப் பெறமுடியும். அவ்வாறான நிலையில் மக்களுக்குத் தடையின்றி சேவையை முன்னெடுக்க முடியும்- என்றார்.(ச-20)

# வவுனியாவில் குறையும் எரிபொருள் வரிசைகள்!

வவுனியா, ஓக. 8

வவுனியாவில் கியூ.ஆர். முறைமை மூலமான எரிபொருள் விநியோகம் வெற்றியடைந்து வரிசைகள் குறைவடைந்து செல்கின்றமையை அவதானிக்க முடிகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவிலும் 16 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த முறைமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து வவுனியா மாவட்டத்தின் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளே இல்லாமல் பெற்றோல் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

# சங்கிலி அறுத்த நபரை கவனித்த பொதுமக்கள்



கிளிநொச்சி, ஓக. 8

பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்தவரைப் பிடித்த பொதுமக்கள் 'நன்றாகக் கவனித்து' பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கிளிநொச்சி நகர் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கிச் சென்ற பெண்ணைப் பின்தொடர்ந்த ஒருவர் பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோட முயன்றுள்ளார். சுதாகரித்துக் கொண்ட பெண் சத்தமிட்டபோது, கூரிய ஆயுதத்தால் அந்த நபர் பெண்ணைக் காயப்படுத்திவிட்டு சங்கிலியுடன் தப்பியோடியுள்ளார். பெண்ணின் சத்தத்தைக் கேட்டு அங்கிருந்தவர்கள் அந்த நபரைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்துள்ளனர்.

அந்த நபரிடம் இருந்து சங்கிலி மீட்கப்பட்ட நிலையில், பொதுமக்கள் அந்த நபரை 'நன்றாகக் கவனித்து' கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-113)

# கடமைக்கு இடையூறு: கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், ஓக.8

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணி பகுதியில் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த இளைஞர் சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஹை-ஏஸ் வாகனத்தை நடு வீதியில் நிறுத்திவிட்டு சென்றுள்ளார்.

பொலிஸார் அந்த வாகனத்தைப் பொதுமக்களின் உதவியோடு வீதியின் கரையோரமாக நிறுத்திய நிலையில் பொலிஸாருக்கும் குறித்த இளைஞருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)



### எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

# சிறப்புத் தேவையுடையோருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 8

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சிறப்புத் தேவையுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிறப்புத் தேவையுடையோர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறப்புத் தேவையுடையோர் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கு எரிபொருளை சீராக வழங்குவது மிகமிக முக்கியமான விடயமாகும். ஏனெனில், சிறப்புத் தேவையுடையவர்கள் எரிபொருள் இல்லாத பட்சத்தில் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்கள் நடந்தோ அல்லது பொதுப் போக்குவரத்தையோ பயன்படுத்திப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பெற்றோல் என்பது அவர்களின் இயங்கு சக்தியாக உள்ளது.

எனவே இந்த இன்றியமையாத நிலையைக் கருத்திற்கொண்டு சிறப்புத் தேவையுடையவர்களுக்கு எரிபொருளை வழங்கவேண்டியது மிக முக்கியமானதும் காலத்தேவையானதுமாகும். உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் - என்றனர். (ம-19)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்தினால் சட்ட நடவடிக்கை

### வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஓக. 8

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களைத் தொடர்ந்தும் நீண்ட வரிசையில் நிறுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ரொசான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பூராகவும் எரிபொருள் விநியோகத்தை சீராக விநியோகிக்கும் முகமாக தேசிய ரீதியில் எரிபொருள் அட்டை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையின்றி எரிபொருளை பெறக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வருவதற்கு முன்னதாகவே வாகனங்களை நிறுத்தி வரிசைப்படுத்தி நாள் கணக்கில் விடுவதன் மூலம் விபத்துக்கள் ஏற்படுவதுடன், போக்குவரத்து அசௌகரியங்களும் ஏற்படுகின்றன.

வர்த்தக நிலையங்களின் வர்த்தக நடவடிக்கைகளும் இதனால் பாதிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளைப் பெறுவதற்காக வருகின்றபோது வாகனங்களை வரிசைப் படுத்தி ஓரிரு மணித்தியாலங்களுக்குள் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்துவதுடன், நாள் கணக்கில் வாகனங்களை நீண்ட வரிசையில் நிறுத்தி வைப்பதைத் தவிர்க்குமாறும் கோருகின்றேன்.

அத்துடன், பொதுப்போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைளுக்கு இடையூறாக இரவிரவாக நிறுத்தப்படும் வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பம்பி இயக்குநரை மாற்றாவிட்டால் பகிஷ்கரிப்பாம்

## இப்படி மிரட்டுகிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 8

**மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்களுடன் தொடர்ந்து மரியாதை இன்றி நடக்கும் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலைய பம்பி இயக்குநரை மாற்றவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

அவர் மீது விசாரணை நடத்தி, வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக உரிய நடவடிக்கை எடுக்காதவிடத்து இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருள் பெறும் தீவகத்தின் மருத்துவமனைகள் எந்த முன்னறிவிப்புமின்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தீவகத்துக்கான சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

ஊர்காவற்றுறை எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநரும் முகாமையாளரும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டமை தொடர்பான கூட்டம் கடந்த முதலாம் திகதி வட மாகாணப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாணப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்தியப் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தீவக மருத்துவமனைகளுக்கான கிளைச் சங்கத்தின் அதிகாரிகள், ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோர் பங்குபற்றினர்.

எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநர் மருத்துவமனை ஊழியர்களை மரியாதைக் குறைவாக ஏசும் பண்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் அவரை மாற்றவேண்டும் என்று எமது சங்கத்தின் அதிகாரிகள் கோரிக்கை வைத்தனர். மேலும் சமூகத்தில் எரிபொருள் வழங்குதலைக் காட்டிலும் மருத்துவர்களின் கண்ணியம் முக்கியமாகும் என்பதை அவர்கள் வலியுறுத்தினர்.

சுகாதாரச் சேவையானது அத்தியாவசிய சேவை என அரசினால் அறிவிக்கப்பட்டு சுகாதார அமைச்சானது சுற்றறிக்கைகள் வழங்கி ஒவ்வொரு மாகாணத்துக்குப் பொறுப்பான ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோர் தமது பிரதேச அரச அதிகாரிகள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பத்து சதவீதத்தை சுகாதார ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இருந்த போதிலும் கடந்த மூன்று மாதங்களாகக் குறித்த எரிபொருள் பம்பி இயக்குநர் மட்டும் எரிபொருள் பெற்றுக்கொள்ளச் செல்லும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களை வார்த்தைகளால் மரியாதைக் குறைவாகத் தொடர்ந்து துன்புறுத்தி வந்துள்ளார். வேண்டுமென்று எரிபொருள் வைத்துக்கொண்டும் வழங்க மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

மேலும், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பம்பி இயக்குநர் மீது செப்ரெம்பர் 1 ஆம் திகதிக்குள் உள்ளக விசாரணையை முடித்து எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத் தீவக மருத்துவமனைகளில் இந்தப்பெற்றோல் நிலையம் மூலமாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் மருத்துவமனைகளான ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் காரைநகர் மருத்துவமனைகள் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வதைத் தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பொய் சொல்கிறார்கள்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் குற்றச்சாட்டு தொடர்பாக ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் தேவராஜா மேரி டொரினை தொடர்பு கொண்டு கேட்டபோது, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிடும் மருத்துவர் எரிபொருள் நிரப்புவதற்காக வருகை தந்தார். பொதுமக்கள் மற்றும் அரச பணியாளர்கள் வரிசையில் நின்று எரிபொருள் நிரப்பியபோதே அவர் வந்தார்.

மருத்துவர் திடீரென எரிபொருள் பம்பிக்கு அருகில் வந்து தனக்கு எரிபொருள் நிரப்புமாறு கோரினார். எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் அங்கு க்யூஆர் பரிசோதனையில் ஈடுபட்டிருந்தார்.

'இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கான கியூஆர் குறியீட்டை பரிசோதித்துவிட்டேன். அவர்களுக்கு எரிபொருள் நிரப்பிய பின்னர் உங்களுக்கு (மருத்துவருக்கு) நிரப்புகின்றேன்' என்று முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அமைவாக இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கும் எரிபொருள் நிரப்பியதும் மருத்துவரின் வாகனத்துக்கு எரிபொருள் நிரப்பப்பட்டது.

இதன் பின்பு, எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரைப் பார்த்து, மருத்துவமனைக்கு வரத்தானே வேண்டும். அங்கு பார்த்துக் கொள்கின்றேன் என்று மருத்துவர் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

முகாமையாளர் அவரது பிள்ளைக்கு சுகவீனம் ஏற்பட்டும் ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குச் செல்லவில்லை.

குறிப்பிட்ட மருத்துவர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வரும்போது அவரது மோட்டார் வாகனத்தில் மருத்துவர் என்பதற்கான எந்த அடையாளங்களும் இருக்கவில்லை.

ஆனாலும் நாம் மருத்துவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கியே சேவையாற்றுகின்றோம்.

இவ்வாறான நிலையில் நாம் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை, தரக்குறைவான வார்த்தைகளால் ஏசினோம், முகாமையாளரை நீக்கவேண்டும் என்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

சம்பவம் இடம்பெற்றபோது ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதேசசெயலகப் பணியாளர்கள் கடமையிலிருந்தனர். நீங்கள் அவர்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். விசாரணையின்போது நாம் எமது சி.சி.ரி.வி. காணொலியையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் -என்றார்.

இது குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அவ்விடத்தில் வாக்குவாதம் நிலவியது உண்மை. ஆனால், எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரிடம் எவ்வித தகாத வார்த்தைகளையும் கூறவில்லை - என்றார். (ஓ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி எரிபொருள் நிலையத்தில் விவசாயிகளுக்கு டீசல் வழங்கல்!

யாழ்ப்பாணம், ஓக. 8

பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

நெற்செய்கை இடம்பெற்று வரும் நிலையில், கைதடியிலுள்ள பொன்னம்பலம் அன் சன்ஸ் எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை டீசல் விநியோகிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கும் ஏனையவர்களுக்குமாக 6 ஆயிரத்து 600 லீற்றர் டீசல் விநியோகப்பட்டது என்று கைதடி பொன்னம்பலம் அன் சன்ஸ் எரிபொருள் நிலையத்தின் முகாமையாளர் செந்தில்செல்வம் றுபிந்தன் தெரிவித்தார். (ம-14,159)

### பெரும்போக நெற்செய்கைக்காக

# முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு எரிபொருள்

### நுணாவில் ஐ.ஓ.சி. நிலையம் ஏற்பாடு

சாவகச்சேரி, ஓக. 8

நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவுள்ளது என்று நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலைய உரிமையாளர் வைத்திலிங்கம் சிவராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் எந்தவிதக் குழப்பமுமின்றி சீராக எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது மழை பெய்திருப்பதால் பெரும்போக நெற்செய்கைக்கு எரிபொருள் இல்லாது விவசாயிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். அவர்களின் எரிபொருள் தட்டுப்பாட்டை எம்மால் முடிந்தவரை நிவர்த்தி செய்வதற்கு முன்வந்துள்ளோம்.

அதற்கமைய தென்மராட்சி பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கு பெரும்போக நெற்பயிர்ச் செய்கைக்காக டீசல் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கமக்கார அமைப்புக்கள் நுணாவில் ஐ.ஓ.சி. நிலையத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, கமக்கார அமைப்புக்கள் ஊடாக பெரும்போக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். அத்துடன் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வரும் விவசாயிகள் குடும்ப அட்டை மற்றும் 'கியூஆர்' குறியீடு கட்டாயம் கொண்டு வரவேண்டும் - என்றார். (ம-14,125)

# சீராக டீசல் விநியோகிக்கப்படினும் பேருந்துக் கட்டணம் அதி உச்சம்!

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 8

எரிபொருள் சீராக விநியோகிக்கப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்துச் சேவைக்கான தனியார் சொகுசு பேருந்துக் கட்டணம் இதுவரையில் குறைக்கப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி சேவையில் ஈடுபடும் தனியார் சொகுசு பேருந்துகளின் ஒரு வழிப் பயணத்துக்கு சுமார் 150 லீற்றர் டீசல் நிர்ணய விலையில், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் வழங்கப்படுகின்றது. எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் கட்டணமாக 4 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபா வரை (ஒருவழிக் கட்டணம்) அறவிடப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14,20)

# மணிவிழா வாழ்த்து




### ஆசிச் செய்தி

மணிவிழா காணும் நாயகி பிளவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி குமுதினி லோகநாதன் அவர்கள் அகவை அறுபது காணும் இவ் வேளையில் சீரும் சிறப்பும் பெற்று முத்துமாரி அம்மன் அருளால் பல்லாண்டு வாழ்கவென மனதார வாழ்த்துகிறேன்.

**சு.ஸ்ரீரங்கநாதக் குருக்கள்**
**தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு**

### மணிவிழா காணும் அதிபருக்கு வாழ்த்துகள்

யா/ பிளவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி குமுதினி லோகநாதன் அம்மணி அவர்கள் தமது அறுபதாவது அகவையினை அடைந்து மணிவிழா காணு கின்றார். ஆளுமை மிக்க பெண்ணாக சிறப்பாக செயற்பட்ட அம்மணிக்கு எமது மணிவிழா வாழ்த்துகள். கடந்த 12 ஆண்டு காலமாக இப் பாடசாலையில் அதிபராக இருந்து பாடசாலையின் பண்புத்திறனை. கல்வி அடைவை. பௌதீக வளத்தை என செயற்றிறன் மிக்க வகையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்திய அதிபர் என்பது குறிப்பிடத்தக்கதும் பெருமைக்குரியதும் ஆகும். இவரின் சேவை தொடர்ந்தும். சமூகத்திற்கு கிடைக்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பொ. ரவிச்சந்திரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்.**

### மணிவிழா வாழ்த்து

மணிவிழா காணும் திருமதி குமுதினி லோகநாதன் அபதிர் அவர்களின் மணிவிழா நாளில் அவரை வாழ்த்தி மகிழ்கின் றேன். இன்முகம் இனியசொல் என இறைவன் என்றும் உங் களில் குடிகொண்டிருப்பார். தமது பணியில் கண்ணும் கருத்து மாய் இருந்து பாடசாலையை வெற்றிகளூடாக முன்னோக்கி செல்ல பணியாற்றிய ஓர் சிறந்த அதிபர் இவர். தனது வாழ் நாளில் சிறப்பாய் வாழ வாழ்த்துகின்றேன்.

**ஞா.ஆதவன்**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலிகாமம் வலயம்.**

### சாதனைப் பெண்ணாய் தடம் பதித்தவர்

யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையின் அதிபராக பொறுப் பேற்று பாடசாலை செயற்பாடுகள் அனைத்திலும் உயர் அடைவு மட்டங்களை ஏற்படுத்திய மணிவிழா நாயகி திருமதி குமுதினி லோகநாதன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள். இப்பாட சாலையில் 12 ஆண்டுகளாக புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற வைத்த பெருமை இவரையேசாரும். இவர் சீரும் சிறப்புமாக வாழ ஆண்வடன் அருள்புரிய வாழ்த்துகின் றேன்

**திரு.சூ.நோபேட் உதயகுமார்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**சங்கானை கோட்டக்கல்வி அலுவலகம்.**

**யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை - அதிபர்**

## திருமதி குமுதினி லோகநாதன்

(SLPS - II, B.Sc, P.G.Dip.in.Edu
Dip.in.School Management Dip.in.Sinhala)

**சேவை விபரம்:**

- கம்/ புனித அன்னை மரியாள் மகளிர் மகாவித்தியாலயம் வத்தளை 1988 - 1989
- யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை 1990 - 1991
- கம் / புனித அந்தோனியார் தேசிய பாடசாலை வத்தளை - ஆசிரியர் 1992 - 1999
- யா/ புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை - ஆசிரியர் 1999 - 2000
- யா/ வட்டு மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை - ஆசிரியர் 2001 - 2010
- யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை 2010 - 2022 - அதிபர்

### மணிவிழா வாழ்த்து

மணிவிழா காணும் மங்கலப் பொன்னாளில்
மாறா இளமை மங்காப்புகழ்
குறையாத செல்வம் குறையாத வளமை
வாழ்நாள் வெற்றி எல்லையிலா இன்பம்
எல்லாமும் பெற்று
இனிதே வாழ வாழ்த்துகிறோம்.

**பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்**
**கற்பகச்சோலை நன்மை விருத்திச்சங்கம்,**
**கற்பகச்சோலை சனசமூக நிலையம்,**
**பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை பழையமாணவர்,**
**கற்பகச் சோலை மக்கள் ஒன்றியம் சுவிஸ்,**

### மணிவிழா வாழ்த்து

எமது யா/ பிளவத்தை அ.மி.த.க.பா. அதிபர் திருமதி குமுதினி லோகநாதன் அவர்கள் 08.08.2022 அன்று மணிவிழா காணும் இவ்வேளையில் அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினராகிய நாம் பெரு மகிழ்வடைகிறோம்.
மாணவரின் கல்வி மேம்பாட்டுடன் விழுமிய பண்பு போன்ற வற்றை வளர்ப்பதற்கு மிகுந்த அக்கறையுடன் செயலாற்றியதோடு பாடசாலையின் பௌதீக வளத்தையும் மேம்படுத்துவதற்காக பாடசாலையின் சமூகத்தோடு இணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரலாற்று தடங்கள் பதித்த நிர்வாகத்திறன் மிக்க ஓர் அதிபராவார்.
இவரது எதிர்காலம் தொடர்ந்தும் மகிழ்ச்சிகரமானதாக அமைவ தோடு நீண்ட ஆயுளோடு வாழவும் எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி நிற்கிறோம்.

**யா/ பிளவத்தை பாடசாலை**
**அபிவிருத்திச் சங்கம்**

### இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்

அறுபது அகவை காணும் எமது பாடசாலை அதிபர் திருமதி குமுதினி லோகநாதன் அம்மணி எமது பாடசாலை மாணவர்களுக் கான விளையாட்டு விழா நிகழ்வின்போது எம்மோடு இணைந்து எமது பாடசாலை கல்வியில் மட்டுமல்லாமல் இணைபாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகிறது என்பதற்கு இணங்க விளையாட்டு நிகழ்வினை திறம்பட நிகழ்த்தி மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர செய்த பெருமை அவரையேசாரும் இவ்வாறு சிறப்புமிக்க ஓர் அதிபர் இனியும் எமது கிராமத்தின் வளர்ச்சியில் பங்குகொண்டு எம்மை வழிநடத்த வேண்டும் என்று கூறி அவரை வாழ்த்தி நிற்கிறோம்.

**இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்**
**பிளவத்தை.**

**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச் சமூகம்**
**யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை**

(cs 20236) (2.6)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 09 - 12 - 1959
விண்ணில் 20 - 07 - 2021



## அமரர் நன்னித்தம்பி தயாசீலன் [கனடா]

**(Bachelor of Law)**

அன்புடனே எம்மை அரவணைத்த அப்பாவே... நீங்கள்
விண்ணுலகம் சென்று ஓராண்டானதுவோ - இம்
மண்ணில் நாம் உள்ளவரை எம்முடன் வாழ்வீர்களப்பா

எமது குடும்பத்தலைவரை இழந்து நாம் தவித்த போது பல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். அன்னாரின் நினைவாக இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தோப்பு, அச்சுவேலி**

**நீங்கா நினைவுடன்**
**குடும்பத்தினர்**

(CR 37024) (3/6)

---

# 12ஆம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 15 - 12 - 1952
விண்ணில் 21 - 07 - 2010



## அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

(முன்னாள் உரிமையாளர், எரிக்கணேஷ் பல்லூக்குக் கண்ணாடியகம்)

**திதி : ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி (08.08.2022)**

அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யைவிட்டு உயிர் பிரிந்து
இன்று பன்னிரண்டு ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்களுடன் வாழ்ந்தகால நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்கள் பொன் மொழியும் புன் சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா!
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம் - அப்பா......!!!!!

**பொன்னையா ஒழுங்கை,**
**ஆனைக்கோட்டை.**

**மனைவி, பிள்ளைகள்**
**சகோதரர்கள்**

(CS 45868) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானைச் சுற்றி சீனா போர்ப்பயிற்சி

## நான்சி பெலோசியின் வருகைக்கு பதிலடி

பிஜீங், ஓக. 8

**தாய்வானைச் சுற்றிவளைத்து சீனா பிரமாண்டமான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

தாய்வானை சீனா தனது சொந்த மாநிலங்களில் ஒன்று (சீனாவின் ஒரு பகுதி) என்று விவாதித்து வருகின்றது. அத்துடன் தாய்வானை சீனாவுடன் இணைக்கும் நடவடிக்கையிலும் சீனா தீவிரமாக ஈடுபடுகின்றது.

அதுமட்டுமன்றி தேவை ஏற்பட்டால் தாய்வானைக் கைப்பற்ற, படை பலத்தைப் பயன்படுத்த தயங்கமாட்டோம் எனவும் சீனா கூறி வருகிறது.

தாய்வான் தனிநாடு. தாய்வானை வேறு எந்த நாடும் சொந்தம் கொண்டாடவோ ஆக்கிரமிக்கவோ முடியாது. அவ்வாறு செய்தால் அமெரிக்கா இராணுவ ரீதியாகத் தலையிடும் என்று அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்திருந்த நிலையில்

அண்மையில் சீனாவின் கடும் எதிப்பையும் மீறி தாய்வானுக்குச் சென்று திரும்பியுள்ளார் அமெரிக்காவின் உயர் இராஜதந்திரிகளில் ஒருவரும், அந்த நாட்டின் சபாநாயகருமான நான்சி பெலோசி.

இந்த நிலையில் ஆத்திரமடைந்த சீனா தற்போது தாய்வானை சுற்றி வளைத்துள்ளது. சீனப்போர்க் கப்பல்கள் அங்கு போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் ஏவுகணைகளை வீசி, பயிற்சியிலும் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை தாய்வானின் வான் எல்லைக்குள் அவ்வப்போது சீனப் போர் விமா னங்கள் அத்துமீறி நுழைந்து மிரட்டல் விடுப்பதையும் வழக்கமாக கொண்டுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-இ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
ஜெயபாலன் கலாவதி
(ஏழாலை மத்தி)

என்(ம்) பாரம் சுமந்து
காலமெலாம் நான்(ம்)
வாழும்
வாழ்வதனைத் தந்து
அறிவுடனும்
ஆரோக்கியத்துடனும்
நான்(ம்) வாழ நீ பட்டினி
இருந்து என்(ம்) ஆயுள்
பலம் பெற நீ தவமாய்
தவமிருந்து என்(ம்) ஆயுள்
வளர்த்தவளே...!! உன்
ஆயுள் போதுமென்று
நினைத்தானோ
பரமனவன்....!!! என்(ம்)
ஆயுள் உள்ள வரை
தீர்க்மாய் தீர்க்கமாய் நீ
வாழ்வாய் என்(ம்) உயிர்
ஆன்மாவுள்....

ஓம் நமசிவாய துணை

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்
கொக்குவில் கிழக்கு,
குளப்பிட்டி

(CS 45869) (3/6)

# உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட ஷெல் சுவிற்சர்லாந்தில் மீட்பு

பேர்ன், ஓக. 8



சுவிஸ் இராணுவத்தின் ஆயுத மற்றும் கண்ணிவெடி அகற்றும் குழுவினரால் 1914 மற்றும் 1918 ஆம் ஆண்டுக்கு இடையில் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட மோட்டார் ஷெல் ஒன்று சூரிச் ஏரியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோட்டர் ஷெல் முதலாம் உலகப் போரில் பயன்டுத்தப்பட்ட மோட்டர் ஷெல் என வெடி பொருள் தொடர்பான நிபுணர்கள் தெரிவிக்கின்றனா.

கடந்த செவ்வாய்க்கிழமை சுழியோடி ஒருவரால் சுமார் 5 மீற்றர் ஆழத்தில் சூரிச் ஏரியிலிருந்து இந்த மோட்டர் ஷெல் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

### ஆப்கானிஸ்தானின்

# காபூலில் குண்டுவெடிப்பு 8 பேர் உடல்சிதறிப் பலி!

காபூல், ஓக. 8

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில், 8 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

வணிக வளாகங்களை அண்மித்த பகுதியி லேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள் ளது. 22 பேர் காயமடைந்த நிலையில், அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரியவருகின்றது.

ஆப்கானிஸ்தானில் செயற்படும் சன்னி முஸ்லிம் போராளிக் குழுவொன்று இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்பதாக அறிவித்துள்ளது. (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீங்கள் தொழிலை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சி அனுகூலமாகும். பணியிடப் பிரச்சினையை சரி செய்வீர்கள். நிதி நிலை உயரும். தொழிலில் புதிய திட்டத்தை செயற்படுத்துவீர்கள்.

**இடபம்:** நேற்று இருந்த சங்கடம் விலகும். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். இன்று நீங்கள் நினைத்த செயலை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம் :** உங்கள் முயற்சியில் பின்னடைவு உண்டாகும். இனம்புரியாத குழப்பம் ஏற்படும். இன்று எந்தவொரு செயலிலும் அவசரம் வேண்டாம். நிதானம் தேவை.

**கடகம்:** நண்பர்களின் ஆதரவுடன் நீண்டநாள் பிரச்சினைக்கு முடிவைக் காண்பீர்கள். உறவுகளிடம் ஏற்பட்ட மனஉளைச்சல் சரியாகும். நினைத்த செயலில் லாபம் காண்பீர்கள். நேற்றைய கனவு நிறைவேறும்.

**சிம்மம்:** துணிச்சலுடன் செயற்பட்டு உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வர். உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** உங்கள் முயற்சியில் தடைகளைச் சந்தித்தாலும் போராடி வெல்வீர்கள். விலகிச்சென்ற உறவினர்கள் தேடி வருவர். உங்கள் செல்வாக்கு உயரும். விட்டுப்போன ஒப்பந்தம் உங்களிடம் வந்து சேரும்.

**துலாம்:** மனதில் ஆசைகள் அதிகரிக்கும். உங்களுடைய தேவை களில் ஒன்று நிறைவேறும். அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கை வேண்டும். சங்கடங்களை சந்திப்பீர்கள். எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்.

**விருச்சிகம்:** உங்கள் செல்வாக்கு உயரும். பெரியோரின் ஆதரவுடன் நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில்சுபச்செலவுஏற்படும். மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. உங்களுடைய திறமை வெளிப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குழப்பங்கள் விலகும். மற்றவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**மகரம்:** நேற்றைய செயலால் இன்று சங்கடம் உண்டாகி குழப்பத்தில் மூழ்குவீர்கள். உங்கள் மனதில் தடுமாற்றம் ஏற்பட்டு செயல்களைத் தள்ளிப் போடுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து லாபம் கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.

**மீனம்:** அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியிடங்களில் இருந்து வந்த நெருக்கடிகளை சரி செய்வீர்கள். வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் வாழ்வாதாரம்


## சுண்டிக்குளம் மீனவர்கள் விரக்தி

எரிபொருள் பற்றாக்குறையால் 100க்கும் அதிகமாக கடற்றொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சுண்டிக்குளம் கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தெரிவித்தனர்.

நாளாந்தம் கடலுக்குச் சென்று அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் நிலையில், தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடியால் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பல அதிகாரிகளைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தபோதும் இதுவரை எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்த மீனவர்கள், பல கடற்றொழிலாளர் குடும்பங்கள் பட்டினி நிலைமையில் உள்ளன என்றும் தெரிவித்தனர்.

கடற்றொழிலுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருளைப் பெற்றுத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)



கவிஞர் கவிக்கூத்தன் க.பிறேம்சங்கரின் 'மெய்யெனப் பெய்யும் பொய்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் அண்மையில் வெளியிடப்பட்டது. பொறியியலாளர் வே.கணேஸ்வரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டு கவிதை நூலை வெளியிட்டு வைத்தார். (ய-159)




வவுனியா மாவட்ட, வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தொழிற்பயிற்சி கற்கை நெறி மாணவர்கள் களக்கற்றல் விஜயமாக உதயன் பத்திரிகைக் காரியாலயத்துக்கு அண்மையில் வருகை தந்தனர். பத்திரிகைத்துறை தொடர்பான கலந்துரையாடலிலும் அவர்கள் ஈடுபட்டனர். (ய)



மனித வள முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி மூளாய் மனித வள அபிவிருத்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது. (ச-27)



மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு நற்குண முன்னேற்ற அமைப்பால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-159)

### தனியார்..

முன்வைக்கப்படும்போது ஆதரவு வழங்குவோம் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குக் கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று ஜனாதிபதி ரணில் தெரிவித்ததாகவும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### ரணில்...

பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைக்குச் சர்வகட்சி வேலைத்திட்டமோ அல்லது சர்வகட்சி அரசோ தீர்வு அல்ல. இது காலத்தை வீணடிக்கும் செயலாகும்.

பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண நிறைய வழிகள் உண்டு. அந்த வழிகளை அரசு நாட வேண்டும். இதைச் செய்ய ரணில் அரசுக்கு இயலாதெனில் ஆட்சியை எதிரணியினராகிய எம்மிடம் கையளிக்கவேண்டும்.

எதிரணியிலுள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் உருவாகும் சர்வகட்சி அரசில் இணையக் கூடாது.

தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வகட்சி அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறத் தயாராகவுள்ளனர் என்று பிரதமர் தினேஷ் [illegible] -22)

## அறை வாடகைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு மிக அருகில் கோயில் வீதியில் அமைதியான சூழலில் குளியலறை மற்றும் அனைத்து தளபாட வசதிகளுடன் கூடிய இரு அறைகள் உடன் வாடகைக்கு.
தொடர்புகளுக்கு: 077 350 1812

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் படையாண்டான் தோட்டம் கந்தசாமி கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வருடாந்த மஹோற்சவ திருவிழா நிகழ்வுக்கு தேவையான டீசல், பெற்றோல் என்பவற்றை தந்துதவிய I.O.C உரிமையாளர்
திருவாளர்
**வைத்திலிங்கம் சிவராசா**
அவர்களுக்கு ஆலயசார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
வாழ்த்துவோர்:
ஆலய பரிபாலன சபை

## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர் திருமதி காயத்திரி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் (அபிவிருத்தி அலுவலர் - சாவகச்சேரி நகரம்) பாசமிகு தாயார்
**திருமதி கமலா சண்முகநாதன்**
அவர்கள் 05.08.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
தென்மராட்சி, சாவகச்சேரி
(CS 37015) (3.6)

## இருபதாம் ஆண்டு நினைந்துருகல்



நயினையம்பதியில் 03.09.1936
நல்லையம்பதியில் 19.07.2002

அமரர் நயினையூர் **இராமநாதன் கோபாலபிள்ளை**
திதி : ஆடித் திங்கள் பூர்வபக்க ஏகாதசி (08.08.2022)

ஐயா அன்பின் பாச உறவின் ஆருயிர்த் தெய்வமே
நயினைத் தாயின் தாள் சேர்ந்து இருபதாண்டானதோ
எங்கள் குடும்பத்தில் சுடர் விட்டெரிந்த குலவிளக்கே
தாய். தந்தை எனும் பாச. நேச உன்னதமான உறவுகளே
உங்களைப் பிரிந்து நாங்கள் தவிக்கின்றோம் ஐயா

ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அரசடிப்பிள்ளையாரையும். நயினை நாகபூசணியையும். நல்லூரனையும் பிரார்த்திக்கின்றோம்.
(CS 45819) (3.6)

2/1 மூர்த்த விநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,நல்லூர்,
யாழ்ப்பாணம்.
077 404 7922
உங்கள் பிரிவால் துயருறும்,
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுச் சிலிண்டர்களை திருடிய சந்தேகநபர்கள் 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8

ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாவ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 52 வெற்றுச் சிலிண்டர்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேகநபர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ்பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கைநேற்றுமுன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன் ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாவ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 7 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 52 வெற்றுச் சிலிண்டர்கள் திருடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதற்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன. (ஒ-26)

## இ.போ.ச...

யில் 6பேர் கொண்ட குழுவொன்று போக்குவரத்துச் சபையினர் மீது நேற்று நடத்திய தாக்குதலைக் கண்டித்தே இந்தப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் இதேபோன்று 4 வெவ்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தினாலே தொடர்ந்து சேவைகளை முன்னெடுக்கமுடியும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதியில் 6 பேர் கொண்ட குழுவினர் இ.போ.ச. பேருந்தை மறித்து சாரதி மற்றும் நடத்துநரை நேற்றுத் தாக்கியுள்ளனர். இதில் அவர்கள் காயமடைந்துள்ளனர். தாக்குதல் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 3 பேரையும் கைது செய்வதன் ஊடாகவே எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். அவர்கள் கைது செய்யப்படும் வரையில் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என்றும் கிளிநொச்சி இ.போ.ச. வினர் குறிப்பிட்டனர். (அ-ஒ-113)

## இலங்கைக்கான...

**சீனா**

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்ட கட்டுமானத்துக்குத் தேவையான 51 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை சீன அரசுக்குச் சொந்தமான எக்ஸிம் வங்கி இலங்கைக்கு வழங்க இணங்கியிருந்தது. தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் நிறுத்தப்பட்டமையையடுத்து கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான 37 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கிய திட்டத்தில் பணிபுரிந்த சுமார் 500 சீனர்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். இந்தக் கடன் நிறுத்தல் காரணமாக சுமார் 2 ஆயிரம் இலங்கையர்களின் தொழில்களும் ஆபத்துக்குள்ளாகியுள்ளன.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலையில் இதுவரை இலங்கை அரசின் 33 பில்லியன் ரூபா நிதியில் சுமார் 32 வீதமான வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**ஜப்பான்**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை விரிவாக்கும் திட்டத்துக்காக நிதியுதவியை ஜெய்க்கா என்ற ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனம் வழங்கி வந்தது. தற்போது தமது திட்டக்கடனான 570 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இதனையடுத்து இந்தத் திட்டத்தின் தொழிலாளர்களின் பணி ஒப்பந்தத்தையும் ரத்து செய்ய நிர்வாகம் முடிவு செய்துள்ளது. 2024 இல் நிறைவடையும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த முனைய திட்டம் முடிவுறுத்தப்பட்டால், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஆண்டுக்கு 15 மில்லியன் பயணிகளை கையாளும் திறனைப் பெறும் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-5)

## வெறிச்சோடிய...

தொடக்கம் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் இடம்பெறுகின்றது. வடக்கு மாகாணத்துக்கு குறிப்பாக யாழ். மாவட்டத்துக்கு கடந்த வாரம் அதிகளவான எரிபொருள் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வாரத்தின் ஆரம்ப நாள்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமையின் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் குறைந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை அரச பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு மாத்திரம் யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டபோதும், வெகு விரைவாகவே அவர்களுக்கான எரிபொருள் வழங்கும் பணி நிறைவுற்றதால், பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மதியத்தின் பின்னர் பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

'கியூ.ஆர்' குறியீட்டு நடைமுறைக்கு அமைவாக எரிபொருள் விநியோகிக்கப்படுவதாலேயே, இவ்வாறு எரிபொருள் நெருக்கடி குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## கூட்டமைப்பை...

கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாச்சிமார் கோயில் அருகாமையிலுள்ள ராஜா ஹம்சிகா மண்டபத்தின் சதானந்தம் அரங்கில் நேற்று இடம்பெற்ற மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'தமிழ் மக்களின் நலன்களுக்குப் பங்கம் ஏற்படாத வகையில், இந்த நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் எனும் அடிப்படையில், தமிழினத்தின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற, முஸ்லிம் அரசியல் சக்திகளுடனும் மலையக அரசியல் சக்திகளுடனும் இணைந்து மற்றும் எமது அபிலாஷைகளை ஏற்றுகொள்கின்ற சிங்கள முற்போக்கு சத்திகளின் ஆதரவுடனும், பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு எதிராகச் செயற்படுதல்', 'போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரும் காணப்படுகின்ற சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அரசியல் கூட்டு முன்னணி ஒன்றின் இருப்புக்காகத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தல். அத்தகையதொரு கூட்டு முன்னணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்களின் நலன்சார்ந்து இயங்கி வரும் இதர தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுதல் - என்பன உட்பட 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (அ-ஒ-5)

(தொடர்புடைய செய்தி - பக்:4)

## தமிழர்...

நாட்டுக்கு டொலரைத் தேடும் திட்டத்துக்காகவே உலங்கு வானூர்த்தி மூலம் வடக்கு மாகாணத்துக்குச் சென்றதாக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் 4 ஆயிரம் பேருக்கு சதொச வவுச்சர் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ரவி கருணாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலங்கு வானூர்தியில் ஏன் மன்னாருக்குச் சென்றீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, 'நான் ஏன் போக முடியாது? நான் அரசாங்கத்தில் இல்லை. அதனால் நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் முதலீட்டாளர்களுடன் சென்று டொலரைச் சேகரிக்க முயற்சிக்கும் போது, அதனையும் தவறாகப் பார்க்கின்றார்கள். ஊடகங்களும் இதனை அறிந்து கொள்ளவேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் பதவி ஏற்பீர்களா? என ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ரவி கருணாநாயக்க, 'இப்போது தேவை பதவிகள் அல்ல, மக்களுக்கு உதவுவதே' எனப் பதிலளித்துள்ளார். (அ-ஒ-இ)

## நீங்களாகவே...

ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் மூத்த அதிகாரிகள் 4 பேரை, ஆளுநர் தியாகராஜா பந்தாட எடுத்த முயற்சிக்கு கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வரும் நிலையிலேயே அவர் இவ்வாறானதொரு மிரட்டலை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

வட மாகாணத்தில் கீழ்நிலை அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மறைக்கப்பட்டு ஒரு சில மேல் அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக வட மாகாண பிரதம செயலர் அலுவலகம் செயற்பட்டுள்ளது. இது தொடர்பில் எனக்கு ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வடக்கு மாகாண நிர்வாகத்தில் இடம்பெற்ற நிர்வாக முறைகேடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது மாகாண பிரதம செயலர் அலுவலகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியவில்லை.

இலங்கையின் ஏனைய எட்டு மாகாணங்களில் விவசாயப் பணிப்பாளர்கள் எவ்வளவு காலம் பணியில் இருந்தார்கள்? எவ்வளவு காலம் இருக்க முடியும்? என ஆராய்ந்தால் வடக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் சற்று வித்தியாசமாக இருக்கிறது.

இலங்கை நிர்வாக சேவை தரம் II, III ஆகிய பதவிநிலைகளிலுள்ள அதிகாரிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை நிர்வாக சேவை சிறப்பு தரம் I இல் உள்ள அதிகாரியை விசாரணைக்கு உட்படுத்தியது யார்? அதன் பெறுபேறு என்ன?

வடக்கு நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு எவ்வளவு காலத்துக்குள் மனித உரிமை ஆணைக்குழு தீர்வை வழங்கியுள்ளது?

வட மாகாண பிரதம செயலர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட மாகாண நிர்வாக அதிகாரிகள் தொடர்பிலான விசாரணைகள் எவ்வளவு காலத்துக்குள் முடிவுறுத் தப்பட்டன? சில முரண்பாடுகள் மறைக்கப்பட்டதன் பின்னணி என்ன?

சில முறைப்பாடுகள் விசாரிக்கும்போது குற்றஞ்சுமத்தப்பட்டவரின் பெயர் கூட குறிப்பிடாமல் விசாரணைகள் இடம் பெற்றன என்பது எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

ஒரு சிலரின் தேவைக்கேற்ப சிநேகபூர்வமாகச் செயற்படும் அதிகாரிகளால் கீழ்நிலை அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆளுநர் இடமாற்றங்களை வழங்குவதில்லை. பொதுமக்களால் அல்லது அதிகாரிகளால் சக அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை இடம்பெற்று குற்றம் உறுதிப்படுத்தப்படுமானால் பணிநீக்கம் அல்லது தண்டனை வழங்குதலை ஆளுநர் என்ற வகையில் மேற்கொள்வேன்.

வடக்கு மாகாணத்தில் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் கோப்புகள் என்னிடமுள்ளன. மக்களை யாரும் திசை திருப்ப முடியாது. இவ்வளவு காலமும் தவறுகள் செய்தவர்கள் தாங்களாகவே இடமாற்றத்தைப் பெற்றுச் சென்று மாகாண நிர்வாகத்தை உரிய முறையில் மேற்கொள்ள வழிவிட வேண்டும். எனது பொறுமையை சோதிக்க விரும்பினால் விசாரணைக் குழு அமைத்து எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதோடு முறைகேடுகள் தொடர்பில் பொது வெளியில் அம்பலப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படுவேன் - என்றார். (அ-ஒ-27)

## இன்றுமுதல்...

இரவு 6 மணியிலிருந்து 9 மணி வரையிலான காலப் பகுதியில் ஒரு மணி நேரம் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படும்.

இதேவேளை - நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் மின்துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## சமையல்...

லாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவையில் இன்று இந்த விடயம் முன்மொழியப்பட்டு, விலை குறைப்புத் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் இருந்து

# ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 32 பேர் வெளிநாட்டுக்குப் பயணம்!

கொழும்பு, ஓக. 8

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 4 மடங்காக அதிகரித்துள்ளது. அதற்கமைய ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 32 நபர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்று மத்திய வங்கியின் தரவுகள் தெரிவித்துள்ளன.**

தென்னிந்தியா அல்லது அவுஸ்திரேலியாவுக்குக் கடல் வழியாக சட்டவிரோதமாக தப்பிச் செல்பவர்களின் எண்ணிக்கையைவிட சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் செல்வோரின் எண்ணிக்கையே இது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நுழைய முயன்ற 46 இலங்கையர்களை அவுஸ்திரேலிய எல்லைப்படை திருப்பி அனுப்பியது. அதன்படி இந்த ஆண்டு மே மாதத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 183 எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. (ம-14,இ)

## மழை தொடரும்



கொழும்பு, ஓக. 8

சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடும் என்பதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலாபத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சிலாபத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இந்த விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

## வங்கியொன்றில்

# 68.3 மில்லியன் ரூபா மோசடி உதவி முகாமையாளர் கைது

கொழும்பு, ஓக. 8

அரசாங்கத்தின் வங்கியொன்றிலிருந்து 68.3 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியொருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை அரச வங்கியொன்றில் 48 போலி கடன் ஆவணங்களைச் சமர்ப்பித்து 68.3 மில்லியன் ரூபாவுக்கும் கூடுதலான நிதி மோசடி செய்யப்பட நிலையில், அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்தன. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உயிரிழந்துள்ள நிலையில், மோசடிக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட வங்கியின் கடன் பிரிவில் பணியாற்றிய முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-14,இ)

# சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுக்கு ஆதரவு!

### *ஜனாதிபதி ரணிலை வாழ்த்தி ஜப்பானிய பிரதமர் கடிதம்*

கொழும்பு, ஓக. 8

இலங்கை முன்னெடுத்துள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ள ஜப்பானிய பிரதமர் பூமியோ கிசிடா, பொருளாதார உறுதித்தன்மை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மூலம் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மிக விரைவில் முடிவுக்கு வரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜப்பானிய பிரதமர் பூமியோ கிசிடா அனுப்பி வைத்துள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துக் கடிதத்தில், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் ஜப்பானிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ம)

**தவறவிடப்பட்டுள்ளது**

க.செல்வக்கதிர்காமத்தையா ஆகிய எனது கைப்பை 02.08.2022 நல்லூர் ஆலயத்தில் தவறிவிட்டது. அதனுள் எனது தேசிய அடையாள அட்டை (483063458V) சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவை உள்ளன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட தொலைபேசி, இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(CS 45867) (3/6)
கைதடி மேற்கு, கைதடி 077 532 5784

**Visit, Study & Work**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்

* Visitor / Tourist Visa – All countries
* Minor Education – under age 17
* Skilled Migration – Express entry (PR)
* Student Visa
* Study & Work – Canada (IELTS தேவையில்லை)
  - Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 தேவை)
  - France, Germany & Latvia, Swedan, Finland (IELTS தேவையில்லை)

Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Tel: 0770385584
naltcjaffna@gmail.com

**துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும். (குறிப்பு :– பணியாளர்கள் தேவை)

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S. Road
Jaffna
077 755 4528

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் : காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493, 076 490 6029


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொய்லர் கோழி இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்ட 01Kg- 1350 கூடுதல் கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை
077 868 9500

**மரண அறிவித்தல்**

பிறப்பு
11 . 04 . 1936



இறப்பு
30 . 07 . 2022

**ஐயங்கர் குமாரசாமி**

(இல.57, ஸ்ரான்லி வீதி, மொடேன் எலக்ரிக்கல் உரிமையாளர்)

பருத்தித்துறை ஊரியவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயங்கர் - குமாரசாமி நியூசிலாந்தில் இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயங்கர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற முத்தையா சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ஹரிசன், குபித்தா, சுபித்தா (திருகோணமலை) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுதுரை, காலஞ்சென்ற மகேஸ்வரி (கனடா), இராசரத்தினம், கமலாவதி, குலவீரசிங்கம் (கனடா), சிவனேசு (கனடா), கைலாசா (கனடா), ரகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நியூசிலாந்தில் நடைபெற்றுள்ளது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இராசரத்தினம்
(ரத்தினம் - சகோதரன்)
077 597 4014

(cs 45870) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.